
பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 07 | வெள்ளிக்கிழமை | 22.11.2024 | அதிர்வு 112

## யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 294 பேர் வெள்ளத்தால் பாதிப்பு



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு 05



# தீர்வு விடயத்தில் டில்லியின் கடும் அழுத்தம் மிக அவசியம்

## தூதுவரை நேற்று நேரில் சந்தித்து தமிழரசின் எம்.பிக்கள் வலியுறுத்து

“இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும். இது தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான இலங்கையின் புதிய அரசுக்கு இந்திய மத்திய அரசு கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு வலியுறுத்தியுள்ளது. 05

# இனவாத அரசியலுக்கு இனிமேல் இடமில்லை



## அக்கிராசன உரையில் ஜனாதிபதி அநுர திட்டவட்டம்

இலங்கையில் இனிமேல் இனவாத அரசியலுக்கு இடமில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி உட்பட அனைவரும் நாட்டின் சட்டத்துக்கு அடிபணிய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதன்போது அரசின் 05




‘குசும்பு’ டாக்டர் தமது திருவிழாவை நாடாளுமன்றத்தின் முதல் அமர்விலேயே ஆரம்பித்து விட்டார். இனி அதிகம் நகைச்சுவை காட்சிகள் நாடாளுமன்றத்தில் கட்டவிழுமென நம்பிக்கையுடன் காத்திருக்கலாம்.

நேற்று அவர் பற்றிய நாடாளுமன்ற உத்தியோகபூர்வ பதிவேட்டில் அவரது மதம் பௌத்தம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மத விடயத்திலும் குசும்புத்தனம் காட்டி இருக்கின்றார. அவரும் அவரது தங்கமும் பௌத்த மதத்திற்கு மாறி விட்டார்களோ என்னவோ...! பாவம் பௌத்தம்.!

சாவகச்சேரி பெருங்குடி மக்கள் பெருமைப் படலாம். நல்லது. அங்கும் புதுவிகாரைகள் இனி விரைவில் அமைக்கப்படலாம்.

\+ \+ \+

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளராக அதன் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. சிறிநேசன் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்று நேற்று மாலை ஊடகங்களுக்கு செய்தி வெளியிடப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 05









# பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில்....

இலங்கை ஜனநாயகக் சோசலிச பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொண்டு அரசின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்து அக்கிராசன உரையை நிகழ்த்தினார்.











# புதிதாக அமைக்கப்படவுள்ள மீன்பிடி வான் புனரமைத்தல் தொடர்பான கலந்துரையாடல்

புதிதாக அமைக்கப்படவுள்ள மீன்பிடி வான் புனரமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாவட்ட செயலக அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.



புதிதாக அமைக்கப்படவுள்ள மீன்பிடி வான் புனரமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள மீன்பிடி வான் திருத்துதல் தொடர்பான விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

மேலும், இது தொடர்பான உரிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அதற்கான நிதியைச் சிறந்த முறையில் பயன்படுத்துதல் தொடர்பாகவும் அரச அதிபரால் உரிய தரப்புக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், தெல்லிப்பளை பிரதேச செயலாளர், கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பொறியியலாளர், மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர், தெல்லிப்பளை மற்றும் சங்கானை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், யு.என்.டி.பி. நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



# இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நடவடிக்கை எடுப்போம்

## அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவிப்பு



இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்ந்து பெரும் இழுபறியாக உள்ளது அதனால் எமது மீனவர்களே பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். அரசாங்கம் எமது நாட்டு மீனவர்களை பாதுகாக்க உறுதியான நடவடிக்கை எடுக்கும். அதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு நாம் ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை.

மிக விரைவில் இந்திய உயர்ஸ்தானிகரை சந்திக்க இருக்கிறேன். அதன்போது இந்த பிரச்சினை தொடர்பில் அவருடன் விரிவாக கலந்துரையாட எதிர்பார்க்கிறேன்.

அதற்கு முன்பதாக வடக்கு மீனவர்கள் மற்றும் துறைசார்ந்த அனைத்து தரப்புடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படும்."- என்றார்.

# டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக பிடியாணை உத்தரவு



காசோலை மோசடி வழக்கொன்றில் சாட்சியமளிக்க தவறிய முன்னாள் அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் இந்த வழக்கு நேற்று அழைக்கப்பட்ட போது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தைப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தமது வங்கிக் கணக்கில் பணம் இல்லை என்பதை அறிந்தும், தலா 10 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு காசோலைகளை வழங்கி நிதி மோசடியில் ஈடுபட்டார் என தெரிவித்து முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முறைப்பாடளித்திருந்தார்.

இது தொடர்பாக அந்த வர்த்தகருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்குதல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை இடம்பெற்றுவந்தது

எனினும் அந்த வழக்கிற்கு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாக பிரசன்னமாகியிருக்கவில்லை.

இந்தநிலையில், மேற்படி வழக்கு தொடர்பில், குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தநிலையில், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நோய்வாய்ப்பட்டுள்ளார் என்றும் நேற்று நீதிமன்றில் முன்னிலையாக முடியாதெனவும் அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அறிவித்திருந்தார்.

இதனையடுத்து, பிரதிவாதிகளின் சமர்ப்பணங்களை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, முன்னாள் அமைச்சருக்குப் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

# தமிழரசு நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளராக ஸ்ரீநேசன் நியமனம்



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளராக, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

10 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்றையதினம் நாடாளுமன்ற நூலகக் கட்டடத்தில் கூடியது.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில், கட்சியின் ஊடகப் பேச்சாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் அவர்களை சிவஞானம் சிறீதரன் முன்மொழிந்திருந்தமையுடன், சண்முகம் குகதாசன் அவர்கள் வழிமொழிந்திருந்தார்.

தமிழரசின் நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையிடும் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் அவர்கள், மருத்துவர் இளையதம்பி ஸ்ரீநாத் அவர்களால் முன்மொழியப்பட, அதனை ஞானமுத்து ஸ்ரீநேசன் வழிமொழிந்திருந்தார்.

இக்கூட்டத்தின் போது, தமிழரசுக் கட்சியாக ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடுவதென்றும், அதற்கான வரைவுகளை முறையாகத் தயாரித்து, திட்டமிட்டதும், ஆக்கபூர்வமானதுமான சந்திப்பை மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் பேசப்பட்டது. தாம் கட்சியின் பேச்சாளராகவும் நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளராகவும் இதுவரை நீடித்து வந்தார் என்றும், இரண்டு பொறுப்பையும் சாணக்கியன் ஏற்பாரயின் இரண்டு பேச்சாளர் பொறுப்புகளில் இருந்தும் தாம் விலகலாம் என்றும் சுமந்திரன் அங்கு குறிப்பிட்டார்.

ஆனால் சாணக்கியன் அந்தப் பதவியை ஏற்க மறுத்து விட்டார்.

"நீங்கள் அந்தப் பதவியை ஏற்று வெளிப்படையாகப் பேசியமையால்தான் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டீர்கள். எனக்கு அந்தப் பிரச்சினைகள் வேண்டாம்." – என்று அப்போது சுமந்திரனைப் பார்த்து அங்கு கூறினார் சாணக்கியன்.

"சரி.அப்படியே இருக்கட்டும். நாடாளுமன்றக் குழுக் கூடி தனது பேச்சாளரை முடிவு செய்யும்." – என்று அப்போது குறிப்பிட்டு விடயத்தை முடித்து வைத்தார் சிறிதரன்.

இப்போது என்னவென்று பார்த்தால் சிறிநேசன் 'தமிழரசு நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளர்' என்று குறிப்பிடாமல் மொட்டையாக 'தமிழரசுக் கட்சியின் பேச்சாளர்' என்ற செய்தி வெளியாகியிருக்கின்றது.

நேரடியாக தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சத்தியலிங்கத்திடம் தொடர்பு கொண்டு கேட்டேன்.

"நாடாளுமன்றக் குழு அந்தக் குழுவுக்கான பேச்சாளரைத்தான் நியமிக்க முடியும். முழுக் கட்சிக்குமான பேச்சாளரை நியமிக்கும் பொறுப்பு நாடாளுமன்ற குழுவுக்கு கிடையாது. அது தன்னுடைய நாடாளுமன்றக் குழுப் பேச்சாளராக சிறிநேசனை நியமித்திருக்கின்றது." – என்று விளக்கமளித்துத் தெளிவுபடுத்தினார் கட்சியின் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம்.

## தீர்வு விடயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு சார்பில் அதன் தலைவரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், ஞானமுத்து ஸ்ரீநேசன், இளையதம்பி சிறிநாத், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலும், தமிழரசுக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அத்தகைய அரசியல் நகர்வுகளில் இந்தியாவின் வகிபங்கு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

## இனவாத அரசியலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொள்கைப்பிரகடனத்தைமுன்வைத்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அக்கிராசன உரையை நிகழ்த்தினார்.

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

"தேர்தல் முறைக்கு அமைய பெரும்பாண்மை மக்கள் ஆணை இம்முறை கிடைக்கப்பெற்றுள்ளது. புதிய அரசை அமைப்பதற்கான மக்கள் ஆணையை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என அனைத்து மக்களுக்கும் இணைந்து வழங்கியுள்ளனர். அனைத்து இன மக்களும் எம் மீது நம்பிக்கை கொண்டு அதிகாரத்தை வழங்கியுள்ளார்கள். எம் மீது நம்பிக்கை வைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேர்தலில் ஆதரவளித்த, ஆதரவளிக்காத அனைவரையும் இலங்கை பிரஜைகள் என்றே நான் கருதுவேன்.

தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் வெவ்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண்டிருக்கலாம். ஆனால், மீண்டும் இந்த நாட்டில் இனி இனவாத அரசியலுக்கு இடமில்லை. அதேபோன்று மத கடும்போக்குவாதம் தலைதூக்குவதற்கும் இடமளிக்கப் போவதில்லை.

இனவாத மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் இங்கு வாழ்கின்றனர். ஒருவருக்கு ஒருவர் இடையே சந்தேகம் குரோதம் அவநம்பிக்கை வலுப்பெற்றுள்ளது. இத்தகைய பின்னணியில் எதிர்கால சந்ததிக்கு அத்தகைய அரசை உருவாக்காதிருக்கும் பொறுப்பு இன்று நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எமக்கு உள்ளது.

நாட்டினுள் ஜனநாயக கோஷங்கள் இருக்க முடியும். ஆனால், எவரும் மீண்டும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இனவாத மதவாத கோஷங்களை கட்டியெழுப்ப இடமில்லை. இந்த மக்கள் ஆணையில் மற்றுமொரு முக்கிய நோக்கம் இருந்தது. நீண்டகாலமாக தொடர்ந்த இத்தகைய மோசமான அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டிய தேவை இருந்தது.

மக்களால் வெறுக்கப்படும் நாடாளுமன்றம் மக்களை ஆள்வதற்குத் தகுதியற்றது. ஆகவே, மக்களால் விமர்சிக்கப்படும் நாடாளுமன்றம் தோற்றம் பெற இடமளிக்க முடியாது.

நாடாளுமன்றம் மக்களுடன் நெருக்கமாகச் செயற்பட வேண்டும். சிறந்த அரச சேவையின் ஊடாகவே நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமாக அமையும் மக்கள் நலனுக்காகச் செயற்படும் சிறந்த அரச சேவையை நாட்டில் மீள உருவாக்க வேண்டும். அதற்கான ஆணையை அரச ஊழியர்கள் எமக்குப் பெரும்பான்மையாக வழங்கியுள்ளனர். அது தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். ஜனாதிபதி உட்பட அனைவரும் நாட்டின் சட்டத்துக்கு அடிபணிய வேண்டும். சட்டம் தொடர்பில் வீழ்ச்சி கண்டுள்ள மக்களின் நம்பிக்கை மீள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அரசியல்பழிவாங்கலில் ஈடுபடும் நோக்கம் எமக்கில்லை. எது எவ்வாறாக இருப்பினும் நாட்டில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய குற்றங்கள் உள்ளன. அந்த விடயம் முறையாக விசாரணை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்கப்படும்.

நியாயத்தை எதிர்பார்க்கும் மக்களின் ஆணையும் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள மக்கள் ஆணைக்குள் உள்ளடங்கியுள்ளது.

குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும். சட்டம் நீதி உரிய வாறு நடைமுறையாகும் ஆட்சி உருவாக்கப்படும். அந்த வகையில் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்படும்." – என்றார்.

## யாழ். மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மற்றும் ஏனைய அனர்த்தங்களால் 610 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 294 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 20 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் இதுவரை 34 குடும்பங்களைச் சேர்ந்த 108 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஏழு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 111 குடும்பங்களைச் சேர்ந்த 475 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 8 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தம் மற்றும் இடி மின்னல் தாக்கத்தால் 5 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 174 குடும்பங்களைச் சேர்ந்த 641 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 68 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 145 குடும்பங்களைச் சேர்ந்த 494 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 103 குடும்பங்களைச் சேர்ந்த 424 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்," – என்றார்.

# கல்முனையில் ஐஸ் போதைப்பொருளுடன்

## இரண்டு பேர் நேற்று பொலிஸாரால் கைது

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனைக்குடி பிரதேசத்தில்

பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இருவரை நேற்று வியாழக்கிழமை இரவு 7.00 மணியளவில் கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனைக்குடி 09 பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய நபரொருவரும், கிரீன் ஃபீல்ட் கல்முனைக்குடி 02, பிரதேசத்தை சேர்ந்த 20 வயதுடைய நபரொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 970 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும், மற்றவரிடம் இருந்து 860 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர்களை கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இந்த கைது நடவடிக்கை கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டது.

# ஜின் கங்கையின் குறுக்கே பாலம் இடிந்து விழுந்ததில் ஒருவர் பலி



காலி, நாகொட பத்தேகம வீதியில் ஜின் கங்கையின் குறுக்கே உள்ள இரும்புப் பாலத்தைத் திருத்திக் கொண்டிருந்த ஒருவர் நேற்று மாலை பாலம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தார்.

நாகொட பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.


பாலத்தின் நடுக் கம்பிகளில் சிக்கிக் காயமடைந்த தொழிலாளி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலத்தை நாகொடை காவல்துறையினரும், பிரதேசவாசிகளும் மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2024

"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!"
- கவிஞர் புதுவை இரத்தினதுரை



# மருந்து மோசடி குறித்த விசாரணைகளுக்கு முழுமையாக ஒத்துழைப்பேன்: ரமேஸ் பத்திரண



சுகாதார அமைச்சில் கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மருந்து கொள்வனவு மோசடிகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு விசாரணைக்கும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்க நான் தயார்.”

– இவ்வாறு முன்னாள் சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.

மருந்து மோசடிகள் தொடர்பில் வாக்குமூலமளிப்பதற்காக நேற்று வியாழக்கிழமை குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு வருகை தந்த போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மருந்து கொள்வனவு மோசடிகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு விசாரணைக்கும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்க நான் தயாராக இருக்கின்றேன். அமைச்சரவை தீர்மானங்கள் வெ வ்வேறு அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கமைய நிதி அமைச்சின் அங்கீகாரத்துடனேயே எடுக்கப்படுகின்றன.

எனவே இவை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் எமது தரப்பில் பிரச்சினைகள் இல்லை. எவ்வாறிருப்பினும் நீதிமன்றத்தில் இது குறித்த வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் அவற்றுக்கு ஒத்துழைப்பதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம்.

உற்பத்தியின் போது மருந்து பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. அவை தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவே நான் இங்கு முன்னிலையாகியிருக்கின்றேன். புதிய சுகாதார அமைச்சர் சிறப்பாக பணியாற்ற வாழ்த்துகின்றேன்.”– என்றார்.

# மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் இன்றுடன் நிறைவு



2024 ஆண்டு பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் இன்றுடன் நிறைவடைகின்றன.

இதற்கமைய, அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் அனைத்து தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை வழங்கப்படவுள்ளது.

அத்துடன், முஸ்லிம் பாடசாலைகளின் மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றன.

இதன்படி, அனைத்து பாடசாலைகளின் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பகல் கனவு....!

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி எதிர்பார்த்த நிலைமையையும் தாண்டியது. அந்த வெற்றி நாட்டின் செல்நெறியில் ஒரு புதிய திருப்பு முனை என்று கூறப்பட்டது. இந்த வெற்றியின் மூலம் நாட்டை புதிய பாதையில் தேசிய மக்கள் சக்தியின் தலைமை கொண்டு செல்லப் போகின்றது என்றும் விதந்துரைக்கப்பட்டது.

நாட்டின் புதிய பாதைக்கான தடமாக புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும் என்றும் கூடத் தெரிவிக்கப்பட்டது. நாட்டின் இனப் பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப் பகிர்வு, ஆட்சி முறைமை மாற்றம், தேர்தல் சீர்திருத்தம் என்று பல்வேறு தலைகீழ் மாற்றங்களை புதிய அரசமைப்பின் மூலம் தேசிய மக்கள் சக்தி செய்யும் என்றும் உரைக்கப்பட்டது.

அத்தகைய புதிய ஆட்சி பீடத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர்வு நேற்று இடம் பெற்றது. தம்முடைய தேசிய மக்கள் சக்தி அரசின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான கொள்கை விளக்க உரையை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேற்று முன் வைத்தார்.

ஆனால் நாட்டை கடந்த முக்கால் நூற்றாண்டு காலமாக உலுப்பி வருகின்ற தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வுத்திட்டம் பற்றியோ, அதற்கான நகர்வுகள் குறித்தோ தமது அரசினுடைய கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெளிவாக எதையுமே குறிப்பிடவில்லை.

வழமையாகச் சிங்களத் தலைவர்கள் கூறுகின்ற மாதிரி எல்லா இனத்திற்கும் சமமான உரிமை, நல்லிணக்கம், புரிந்துணர்வு என்றெல்லாம் அவர் பீற்றிக் கொண்டாரே தவிர, இந்த நாட்டில் சுமார் மூன்று தசாப்த கால கொடூர யுத்தத்திற்கு வழிகோலிய தேசிய இனப் பிரச்சனைக்கு எத்தகைய தீர்வை முன் வைக்கப் போகின்றார் என்பது பற்றிய எந்தக் கருத்தையும் அவர் இந்த உரையில் குறிப்பிடவில்லை.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அவா - தீவிரம் - எதிர்பார்ப்பு - அர்ப்பணம் - தமக்கு இருப்பதாகக் கூட தமது உரையில் அவர் விசேடமாகக் குறிப்பிட்டுக் காட்டவில்லை.

தந்திரோபாயமாக அவர் தமது உரையை வழமையான ஜனாதிபதிகளின் கொள்கை விளக்க உரை போன்று எழுதி தயாரித்து வந்து வாசிக்கவில்லை. அதன் மூலம் தீர்வுக்கான திட்டம் குறித்து முன்யோசனையோடு உரை தயாரித்து பேசவில்லை என்று கூறிச் சமாளிப்பது அவரது நோக்கமாக இருக்கலாம்.

எது, எப்படி என்றாலும் நாட்டின் மிக முக்கியமான - தீவிரமான - பிரச்சினை குறித்து அவர் வெளிப்படையாகப் பேசவோ, உறுதியளிக்கவோ, தமது திட்டத்தை வெளிப்படுத்தவோ தயார் இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சுட்டிக்காட்டுவது போல இந்த நாட்டில் தமிழினத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரக் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவது தொடர்பான தமது நிலைப்பாடு பற்றியும் ஜனாதிபதி வேண்டும் என்றே மௌனம் காத்திருக்கிறார்.

ஒட்டுமொத்தத்தில் தமிழர் தேசத்தின் கணிசமான பகுதியினர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் அரசுக்கு வாக்களித்து இருக்கின்ற போதிலும், அவர்கள் எதிர்பார்த்திருக்கின்ற முக்கிய இரண்டு விடயங்கள் தொடர்பில் - தீர்வு மற்றும் யுத்தகால விடயங்களுக்குப் பொறுப்பு கூறல் விவகாரங்களில் - தீர்க்கமான முடிவு எதனையும் அல்லது தனது நோக்கங்கள், திட்டங்களை ஜனாதிபதி வெளியிடாமல் மௌனம் காத்திருக்கிறார்.

அவருக்கும் அவரது அரசுக்கும் விழுந்தடித்து வாக்களித்த தமிழர் தரப்பில் கணிசமானவர்கள் இப்போது அவரின் உண்மை முகத்தை அறிந்து கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாகி வருகின்றது என்று குறிப்பிட வேண்டும்.

நாட்டின் தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வு குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேற்றுத் தமது கொள்கை விளக்க உரையில் பேணிய மௌனம் அத்தகைய பிரச்சினையொன்று நாட்டில் இருப்பதாகவே அவர் கருதவில்லை என்ற கருத்து நிலைப்பாட்டின் பிரதிபலிப்பாகவும் கூட அர்த்தப்படுத்தப்படலாம்.

அந்த மௌனத்துக்கு அல்லது கருத்துத் தவிர்ப்புக்கு அதுதான் காரணம் என்றால், இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய நீதியான தீர்வு ஒன்று எட்டப்படும் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறுவது பகல் கனவுதான்...!



# வவுனியாவில் இம்முறை 10 ஆயிரம் ஏக்கராக குறைவடைந்த பெரும்போக நெற்செய்கை!

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் இம்முறை பிந்திய மழைவீழ்ச்சி காரணமாக பெரும்போக நெற்செய்கையில் பாரிய வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில், இதுவரையான காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் உள்ள 9 கமநல அபிவிருத்தி பிரிவுகளினூடாகவும் 10 ஆயிரத்து 51 ஏக்கர் காணிகளில் மாத்திரம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவற்றில் மிககுறைவாக உலுக்குளம் பிரிவில் 30 ஏக்கர் செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன், அதிகபட்சமாக ஓமந்தை பிரிவில் 2,489 ஏக்கர் அளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்முறை பெரும்போகத்திற்கான மழைவீழ்ச்சி பிந்தியமையினால் இந்தநிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இனிவரும் நாள்களில் மழைவீழ்ச்சிக்கு ஏற்ப 25 ஆயிரத்து 216 ஏக்கர் அளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் எதிர்பார்க்கப்படுகின்றது.









# மக்கள் எவரையும் அலைக்கழிக்காமல் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பது அரச அதிகாரிகள் கடமை

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

அரச அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களின் தேவைகளை எவ்வளவு விரைவாக நிறைவேற்றிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதைச் செய்து முடிப்பது அரச அதிகாரிகள் கடமை என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் துறைசார் மீளாய்வுக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் உரையாற்றிய ஆளுநர், அலுவலர்கள் பொதுமக்களை தனிப்பட்ட ரீதியில் பழிவாங்கும் வகையில் செயற்படக்கூடாது என்றும், அரச அலுவலகங்களை நாடி வரும் பொதுமக்களின் தேவைகளை எவ்வளவு விரைவாக நிறைவேற்றிக் கொடுக்க முடியுமோ அவ்வாறு செய்து முடிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

"மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் ஆளுநர் அலுவலகத்துக்கு வருகின்றார்கள். அந்த நிலைமையை மாற்றியமைக்கும் வகையில் ஒவ்வொரு அலுவலகங்களும் வினைத்திறனாக பணியாற்ற வேண்டும்." – என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

மேலும், விவசாயிகளின் நீண்ட காலப் பிரச்சினையான அவர்களின் உற்பத்திக்கான சந்தை வாய்ப்பு மற்றும் 10 சதவீதக் கழிவு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டிய ஆளுநர், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் விவசாய உற்பத்திப் பொருள்களைச் சேகரிக்கக் கூடிய மையங்களை உருவாக்குவது தொடர்பில் ஆராயுமாறும் பணித்தார்.

அத்துடன் சந்தைகளில் பின்பற்றப்படும் கழிவு நடைமுறை தொடர்பாகவும் அவதானம் செலுத்துமாறு அறிவுறுத்தினார்.

உள்ளூராட்சி அமைச்சின் கீழான வீடமைப்புத் திட்டத்தில், மீளக்குடியமரும் மக்கள், இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் மக்கள், விதவைகளுக்கே முன்னுரிமையளிக்குமாறும் ஆளுநர் தெரிவித்தார்.

ஆளணிப் பற்றாக்குறை தொடர்பில் திணைக்களத் தலைவர்களால் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் மதிப்பீட்டாளர்களின் பற்றாக்



குறையை நிவர்த்திக்கும் வகையில் 75 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் 17 ஆயிரத்து 138 குடும்பங்களுக்கு காணி இல்லாத நிலைமை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதைப் பூச்சியமாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆளுநர் இங்கு குறிப்பிட்டார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வினைத்திறனை அதிகரிக்கும் வகையில் புதிய தலைவர் செயற்படுவார் என்று எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், சட்டத்துக்கு முரணான வகையில் – தவறாகச் செயற்படும் பேருந்துகளின் உரிமங்களை உடனடியான இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பணித்தார்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநருடன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலர் செ.பிரணவநாதன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஒவ்வொரு மாவட்டங்களினதும் உதவி ஆணையாளர்கள் மற்றும் துறைசார் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.



# செல்வந்தர் கௌதம் அதானி மீது அமெரிக்கா மோசடி குற்றச்சாட்டு



இந்தியாவின் முன்னணி செல்வந்தர்களில் ஒருவரான கௌதம் அதானி மீது அமெரிக்காவில் மோசடி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

250 மில்லியன் டொலருக்கான லஞ்ச திட்டத்தை அவர் முன்னெடுத்தார் எனவும் அமெரிக்காவில் நிதி திரட்டும் போர்வையில் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்றும் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் இந்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன என்று வெளிநாட்டு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த குற்றச்சாட்டுக்களுக்கு அதானி நிறுவனத்திலிருந்து பதில் எதுவும் வழங்கப்படவில்லை.

இந்த நிறுவனத்தின் மோசடிகள் தொடர்பில் 2022 ஆம் ஆண்டிலிருந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

# அதானியை கைது செய்ய ராகுல் காந்தி வலியுறுத்தல்



லஞ்சம், ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டதாக இந்தியத் தொழிலதிபர் அதானி மீது அமெரிக்காவின் நியூயோர்க் நீதிமன்றத்தில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவரை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து செய்தியாளர் சந்திப்பில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி,

“அமெரிக்க நீதிமன்றத்தில் பதிவாகியுள்ள இந்தக் குற்றச்சாட்டின் மூலமாக இந்திய மற்றும் அமெரிக்க சட்டத்தை அதானி மீறியுள்ளது அம்பலமாகியுள்ளது. இருந்தும்கூட, அதானி இன்னும் கைது செய்யப்படாமல் இருப்பது ஆச்சரியமளிக்கிறதிது.

இந்த நாட்டில் பல முதல்வர்கள் எளிதாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். ஆனால், 2000 கோடி ரூபா ஊழல் செய்தவருக்கு பிரச்சினையே இல்லை. அவர் கைது செய்யப்பட மாட்டார் என்பது அனைவரும் அறிந்ததே. ஏனென்றால் அதானியை இந்திய பிரதமர் பாதுகாக்கிறார். மோடி – அதானி ஊழலில் கூட்டு என்பதும் இதன் மூலம் தெளிவாகிறது.

அதானியை உடனடியாக கைது செய்ய வேண்டும். இந்த விவகாரத்தை, நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைத்து விசாரிக்க வேண்டும்.” என்று வலியுறுத்தியுள்ளார்.

# 17,000 வாட்ஸ்அப் கணக்குகளை முடக்கியது உள்துறை அமைச்சு




ஒன்லைன் நிதி மோசடிகளைத் தடுக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்திய உள்துறை அமைச்சு 17,000 இற்கும் மேற்பட்ட வாட்ஸ்அப் கணக்குகளை முடக்கியுள்ளது.

இந்த கணக்குகளில் பெரும்பாலானவை கம்போடியா, மியான்மர், லாவோஸ் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டன, அங்கு அவை இணைய மோசடிக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்திய உள்துறை அமைச்சின் சைபர் கிரைம் ஒருங்கிணைப்பு மையத்தால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை, ஒன்லைன் தளங்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளது.

வேலை வாங்கித் தருவதாகக் கூறி இந்தியக் குடிமக்களை கம்போடியாவுக்கு கவர்ந்திழுக்கும் மனித கடத்தல்காரர்கள், ஆன்லைன் நிதி மோசடிகள் மற்றும் சைபர் குற்றங்களைச் செய்யத் ஊக்குவிக்கப்படுவதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அண்மையில் பிரதமர் நரேந்திர மோடியும் இந்த மோசடி குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்தார், இதுபோன்ற சம்பவங்கள் ஏதேனும் இருந்தால் சைபர் துறித பிரிவுக்கு தெரிவிக்குமாறு வலியுறுத்தினார்.

ஒன்லைன் மோசடிகள் மூலம் ஒவ்வொரு நாளும் சுமார் 6 கோடி இந்திய ரூபா மோசடி இடம்பெறுவதாக உள்துறை அமைச்சின் சைபர் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆண்டு தொடக்கம் ஒக்டோபர் வரை, ஆன்லைன் மோசடிகள் தொடர்பில் 92,334 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என சைபர் பிரிவு தெரிவித்துள்ளது.





# பாகிஸ்தானில் பயணிகள் வாகனத்தை குறிவைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 38 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானில் வடமேற்கில் உள்ள பழங்குடியின பகுதியில் பயணிகள் வாகனத்தை குறிவைத்து, துப்பாக்கி ஏந்திய நபர்கள் கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதலில் 38 பேர் கொள்ளப்பட்டனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி தாக்குதல் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குர்ரம் மாவட்டத்திலிருந்து பெஷா வருக்க சென்று கொண்டிருந்த பயணிகள் வாகனம் மீதே இந்த மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் 42 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 29 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர் என வெளிநாட்டு செய்திகள் தெர்வித்துள்ளன.

40 வாகனங்கள் பொலிஸ் பாதுகாப்புடன் சென்று கொண்டிருந்த நிலையில், இரண்டு வாகனங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்காத நிலையில், பாகிஸ்தான் அதிகாரிகள் இந்த தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். உடனடியாக இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள துடன், பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியும் கடும் கண்டனம் தெரி வித்துள்ளார்.

# இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கு பிடியாணை பிறப்பித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இஸ்ரேலின் முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர் யோவ் கேலன்ட்டிற்கு எதிராகவும் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போரில் மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும் போர் குற்றங்கள் நடந்ததாகவும் விமர்சனங்கள் எழுந்தன. இதற்கிடையே இது தொடர்பான வழக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

அந்த வழக்கில் இப்போது இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை



பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

அதேபோல இஸ்ரேலின் முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர் யோவ் கேலன்ட்டிற்கு எதிராகவும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீன மக்களின் போர் மரணம் தொடர்பாக இஸ்ரேல் அளித்த விளககங்களை நிராகரித்த சர்வதேச நீதிமன்றம், போர் தொடர்பாக இஸ்ரேல் அரசின் அறிக்கைகளையும் நிராகரித்துள்ளது.

மேலும், மருத்துவ உதவிகளைப் புறக்கணித்து, குழந்தைகள் உட்பட பல உயிரிழப்புகளை இஸ்ரேல் ஏற்படுத்தியதாகச் சர்வதேச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த இரு இஸ்ரேல் தலைவர்கள் மட்டுமின்றி ஹமாஸ் தலைவர் முகமது தியாப் இப்ராஹிம் அல்-மஸ்ரிக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலியாவில் சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை

அவுஸ்திரேலியாவைத் தொடர்ந்து, பிரித்தானியாவும் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதனை தடை செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

இதனைத் தடை செய்வதற்கான யோசனை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் தொழில்நுட்ப செயலாளர் பீட்டர் கைல் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை நிகழ்நிலையில் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.








# மன்னார் போராட்டத்தின் போது பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தி, வன்முறையைத் தூண்டியவர்கள் கைதாவர்!

(மன்னார் நிருபர்)

மன்னார் பொது வைத்தியசாலையில் இறந்த இளம் தாயின் மரணத்திற்கு நீதி கோரி நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு முன் அமைதியாக இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் பொது சொத்துக்களைச் சேதப் படுத்தி வன்முறையைத் தூண்டும் விதமாக செயற்பட்ட நபர்களைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக் கையை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வைத்தியசாலைக்குள் நுழைந்து கண்ணாடிகளைச் சேத மாக்கியவர்கள், பொலிஸார் மீது கற்கள் வீசியவர்கள், டயர்கள் உள்ளிட்ட பொருள்களை வீதிகளில் எரித்து மக்க ளின் போராட்டத்தை திசை திருப்பி யவர்கள் போன்றோரைக் கைது செய் யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வைத்தியசாலை ஊஊவுஏ கேமரா மற்றும் போராட்டத்தின் போது எடுக்கப் பட்ட காணொளிகளை சேகரித்து அவற் றின் ஊடாக அமைதியான போராட் டத்தை திசை திருப்பி வன்முறை ஆக்கி யவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.



# பருத்தித்துறை, இன்பர்சிட்டியில் மாவீரர் வாரம் ஆரம்பம்

பருத்தித்துறை – இன்பர்சிட்டி பொது நோக்கு மண்டபத்தில் மாவீரர் வார நிகழ்வுகள் நேற்று வியாழ்க்கிழமை காலை உணர்வெழுச்சியுடன் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு, மஞ்சள் நிற கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு தாயக விடுதலைப் போரில் தம்முயிரை ஆகுதியாக்கிய அவ்வூரைச் சேர்ந்த மாவீரர்களது திருவு ருவப்படமும், ஏனைய மாவிரர்களை குறிக்கும் பொதுப்படமும் வைக்கபட்டு ஈகைச்சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு தின மும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று நவம்பர் 27 ஆம் திகதி மாலை மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக் கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.





# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**1980.06.03**

**மறைவு**
**2024.11.19**

# அழகசுந்தரம் கிருபாகரன்

**(கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை பிரபல தொழிலதிபர்)**

பதுளை மாவட்டத்தைப் பிறப்பிடமாகவும் ஆசீர்வாதப்பர் வீதி, கச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அழகசுந்தரம் கிருபாகரன் அவர்கள் 19.11.2024 செவ்வாய்க்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 8 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் எம்.பியாக எம்.எஸ்.நளீம் நியமனமாகிறார்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ஏறாவூரைச் சேர்ந்த பொறியியலாளர் எம்.எஸ்.நளீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களின் ஆலோசனையின் பேரில் கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் இவரது பெயரைப் பரிந்துரை செய்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளரான இவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏறாவூர் பிரதேச அமைப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்திருக்கும் ஒரேயொரு தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை சுழற்சி முறையில் வழங்கும் தீர்மானத்திற்கு அமைவாக தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பல விடயங்களையும் ஆராய்ந்து முதற்கட்டமாக பொறியியலாளர் எம்.எஸ். நளீமை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக கட்சியின் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.



# திருகோணமலை மாவட்டத்தில் அனர்த்த முன்னாயத்தக் கூட்டம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வெள்ள அனர்த்த முன்னாயத்த மாவட்ட குழுக்கூட்டம் நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நடைபெற்றது.

வருடாந்தம் நவம்பர் மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரை இடம்பெறும் வடகிழக்கு பருவமழை காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் குறிப்பிட்ட பிரதேசங்களில் வெள்ள நிலைமைகள் தொடர்ச்சியாக காணப்படுகின்றன. கூடுதலாக, தற்போது நிலவும் இரண்டாவது பருவமழை காலநிலையானது ஏற்கனவே திருகோணமலை மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க வெள்ள அபாயத்தை அதிகரித்துள்ளது.

இந்தப் பின்னணியில், மழைக்கால அனர்த்தங்களினால் பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கு முன்னோட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து பிரதேச ரீதியாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸினால் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது மாவட்ட பிரதேச செயலாளர்கள், மாவட்ட அரச திணைக்களப் பிரதானிகள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதானிகள் , முப்படையினர் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# பருத்தித்துறை, சுப்பர்மடத்தில் மாவீரர் வாரம் நிகழ்வுகள்

பருத்தித்துறை – சுப்பர்மடம் பொதுநோக்கு மண்டபத்தில் மாவீரர் வார நிகழ்வுகள் நேற்று வியாழ்க்கிழமை காலை உணர்வெழுச்சியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வீதிகளெங்கும் சிவப்பு, மஞ்சள் நிற கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு தாயக விடுதலைப் போரில் தம்முயிரை ஆகுதியாக்கிய அவ்வூரைச் சேர்ந்த மாவீரர்களது திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு, முதல் மாவீரர்கள் உள்ளிட்ட முக்கிய தளபதிகளின் திருவுருவப் படங்கள் நடுவே வைக்கபட்டு அவற்றிற்கு மாலைகள் அணிவிக்கப்பட்டு, ஈகைச்சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது மாவீரர்களது பெற்றோர், உறவினர்கள் உள்ளிட்ட அவ்வூர் பொதுமக்கள் பலரும் பங்கேற்று உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தியிருந்தனர்.












# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

திக்வெல்ல – வலஸ்கல, தொரமுரே பகுதியில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.


மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மீதே இந்த துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.வலஸ்கல பகுதியைச் சேர்ந்த 48 வயதான ஒருவரே சம்பவத்தில் உயிரி ழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட சந்தேகநபர்கள் குறித்த தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

நபரொருவரிடம் இருந்து கப்பம் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் உயிரிழந்த நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கும் கப்பம் பெற்ற சம்பவத்திற்கும் இடையில் தொடர்பு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ரி 56 ரக துப்பாக்கியை பயன்படுத்தியே இந்த துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.





# தென்மராட்சியில் வெள்ள நிலைமை

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை தொடக்கம் பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஒரே நாளில் நீர் நிலைகள் நிரம்பி குடி மனைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

இந்நிலையில் சாவகச்சேரி கோவிற் குடியிருப்பு கிராமத்தில் அமைந்துள்ள உப்புக்கேணிக் குளம் நிறைந்து குடி மனைகளுக்குள் வெள்ளம் புகுந்துள் ளது. அதை அண்மித்துள்ள தார் வீதியில் ஆங்காங்கே நிலத்தில் இருந்து நீர்கொப்பளித்து வெளியேறுவதனையும் அவதானிக்க முடிகிறது.

ஒரேநாளில் கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக தென்மராட்சியின் சில கிராமங்கள் வெள்ள அனர்த்தத்தை எதிர்நோக்கியிருக்கின்றன. பல வீதிக ளும் வெள்ளம் தேங்கி பயணிக்க முடியாதநிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# வெடிக்காத ஷெல் குண்டு வவுனியா வடக்கில் மீட்பு!


(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு, அனந்தர் புளியங்குளம் பகுதியில் வெடிக்காத நிலையில் மோட்டார் ஷெல் ஒன்று நேற்றுப் மீட்கப்பட்டது.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணி ஒன்றைத் துப்பரவு செய்ய முயன்ற போதே இந்த ஷெல் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் அதனை செயலிழகச் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்

# ரணில் விக்ரமசிங்க இந்தியா சென்றார்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்தியன் எயார்லைன்ஸ் விமானத்தில் நேற்று அவர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சென்றுள்ளார்.

அவரது மனைவி மைத்திரி விக்ரமசிங்க, சாகல ரத்நாயக்க மற்றும் பலர் இந்த பயணத்தில் கலந்து கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 22.11.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும்.




இன்று நீங்கள் நம்பிக்கையான மனநிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சிறிது கவனமுடன் இருக்கவும்.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். இன்று ஆற்றலும் ஆரோக்கியமும் குறைந்து காணப்படும்.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம்சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.11.2024

## தனுசு

இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற் கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படு வதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று மிதமான ஆரோக்கியமே காணப்படும். கால் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

## மகரம்

இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய் தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த் தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற் பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப் புள்ளது.

## கும்பம்

இன்று அர்த்தமுள்ள நாளாக இருக் காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

## மீனம்

உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள். பணியிடத்தில் உங்கள் செயல் திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த் தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.



